கட்டபொம்மனின் கடைசி நாட்கள்....

செ.திவான்

கட்டபொம்மனின் கடைசி நாட்கள்....

வரலாற்று ஆய்வாளர்

செ. திவான், எம்.ஏ., எம்ஃபில்.

வள்ளல் வைகோ நூலகம்

106 F 4 A திருவனந்தபுரம் சாலை

பாளையங்கோட்டை - 627 002

தமிழ்நாடு. ✆ 0462 - 572665

உரிமை : ஆசிரியருக்கு

முதற்பதிப்பு : 16 அக்டோபர் 1999
வீரபாண்டிய கட்டபொம்மனின்
200வது நினைவு நாள் வெளியீடு

விலை : ரூபாய் பத்து

அச்சிட்டோர் : ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்.

நீடூழி வாழ்க!



வருங்காலத் தமிழகத்தில் வறியவருக்கு உதவிடும் வள்ளலாய்
வரலாறு படைக்க இருக்கும் வாழும் கட்டபொம்மன்
மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளர்
சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர்

திருமிகு. **வைகோ** அவர்கள்

நீடூழி வாழ்க!

எண்ண அலைகள்

''அகிலத்தில் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற, நடைபெற்று வருகின்ற . விடுதலை வேள்வியில் தங்களை நெய்யாக ஊற்றிக் கொண்டவர்களின் வரலாறும் வாழ்வும் தொகுக்கப்பட வேண்டும். அந்த அனுபவங்களும் தியாக உணர்வுகளும் அடுத்த தலைமுறையினருக்கு வழிகாட்டுதலாக அமைய வேண்டும்''. அந்த அடிப்படையில், வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றிய விவரங்களைத் தேடினேன்; ஆய்வில் கிடைத்திட்ட விஷயங்களில் சிலவற்றை சிறுநூலாக்கிட வேண்டுமென்ற அவா, நெடுங்காலமாகவே என் இதயத்தில் நீறுபூத்த நெருப்பாக இருந்து வந்தது.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய என். கிருஷ்ணசாமி ரெட்டி 'வீரபாண்டிய கட்டபொம்மன் ஆய்வுக் குறிப்புக்கள்' எனும் நூலுக்கு எழுதிய அறிமுக உரையில் ''விடுதலைப் போராட்ட வீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் நாட்டுப்பாடல்கள் நாடோடிக் கதைகள் வாயிலாகத் தமிழக மக்களின் நெஞ்சங்களில் நிறைந்துள்ளார். வீரபாண்டிய கட்டபொம்மனின் பெருமையையும், வரலாற்றையும் மறைப்பதற்கு அந்நிய அரசு படாதபாடு பட்டது. ஆங்கில நூலாசிரியர்கள் சிலர் கட்டபொம்மனை 'கொள்ளைக்காரன்', என்றும் 'கொலைகாரன்' என்றும் வர்ணித்து, நூல்கள் தீட்டியுள்ளனர். அவர்களுடைய உள்நோக்கம் தெளிவானது. அந்த நூல்களையும் ஆதாரமாக வைத்துச் சிலர் ஆராய்ச்சிகள் செய்யத் தலைப்பட்டுள்ளனர். இந்நிலையில் உண்மையான கட்டபொம்மனை மக்கள் முன் கொண்டு வந்து சிறப்புச் செய்ய வேண்டும் என்ற அவா கட்டபொம்மன் வரலாற்றில் உய்ந்தவர்கள் மனத்தில் எழுந்திருப்பது இயற்கையே' என்று கூறியுள்ளார்.

கட்டபொம்மனின் கடைசி நாட்கள்....

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட 150 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக அப்பெருமகன் தூக்கில் மாண்ட நாளை தமிழ் மக்கள் திருநாளாகக் கொண்டாடி வந்தனர். இன்று 200 ஆண்டுகளாகி விட்டது.

பாஞ்சாலங்குறிச்சியின் வீரப்புரட்சியை விளக்கியும், வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றைப் பற்றியும் இதுவரை பல நூற்கள் வெளிவந்து விட்ட நிலையில், அப்பெருமகனின் வாழ்க்கைக் குறிப்பை மட்டும் தந்து விட்டு, வீரபாண்டிய கட்டபொம்மன் பாஞ்சைக் கோட்டையிலிருந்து வெளியேறிச் சென்றதிலிருந்து, பின்னர் கைது செய்யப்பட்டு, கயத்தாற்றிற்கு கொண்டு வரப்பட்டு வீரச் சாவைத் தழுவிய நாட்களில் நடைபெற்ற சம்பவங்களை மட்டும் 'கட்டபொம்மனின் கடைசி நாட்கள்' எனும் சிறு நூலாகத் தந்துள்ளேன்.

எனது முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து உறுதுணையாக இருந்து வரும் மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச் செயலாளர் சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர் தமிழர் தலைவர் திருமிகு. **வைகோ** எம்.பி. அவர்களுக்கு என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

இந்நூல் வெளிவர எனக்கு உதவியாக இருந்து வரும் ஐ. சாமுவேல், S.N. சுப்பையா, திவானி ஜஹானரா, பாளை மு. அருணாசலம், புக் ரவி, புக்மணி, டி.வி. தங்கசாமி, தம்பி செ. இப்ராகிம், S.M.A.Q. ஜெய்லானி, ஹமீது பிரஸ் உரிமையாளர் சாகுல் ஹமீது ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்ற பல நூல்களை வெளியிடும் பாக்கியத்தினை எல்லாம் வல்ல இறைவன் அருள்வானாக.

செ.திவான்

கல்வித்தந்தை சுலைமான் இல்லம்

106 F4A திருவனந்தபுரம் சாலை

பாளையங்கோட்டை 627 002.

16.10.1999

✆ *0462 - 572665*

வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றுக் குறிப்புகள்

அன்னைத் தமிழகம் வீரத்தின் விளைநிலம்; இங்கு வாழையடி வாழையாக வீரப் பெருமக்கள் பலர் தொன்று தொட்டு இன்று வரை தோன்றி வருவது உலகறிந்த உண்மை.

வணிகக் கொடி பிடித்து, வஞ்சக வலை விரித்து வளமார்ந்த திருநாடுகளையெல்லாம் வளைத்துக் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உலகின் பல நாடுகளில் சுதந்திரப் போர் நடைபெற்றதை சரித்திரத்தின் பக்கங்கள் நமக்கு சான்றுகாட்டி நிற்கின்றன. தமிழகத்தில் காலனி ஆதிக்கத்தை எதிர்த்து தெற்குச் சீமையில் விடுதலை முரசு கொட்டியவர் வீரபாண்டிய கட்டபொம்மன்; இதோ அவரது வரலாற்றுக் குறிப்புக்கள்.

வீரபாண்டிய கட்டபொம்மன்

ஆறுமுகத்தம்மாள் - திக்குவிசய கட்டபொம்மு தம்பதியருக்கு, 3.1.1760 இல் பிறந்தவர் வீரபாண்டிய கட்டபொம்மன்.

பாஞ்சாலங்குறிச்சி

ஆதியில் திருநெல்வேலி மாவட்டம் சாலிக்குளத்தை அடுத்துள்ள காட்டில் வேட்டையாடச் சென்றனர் கட்டபொம்மனின் மூதாதையர். அங்கு குறிப்பிட்ட இடத்தில் முயல் திடீரென்று வேட்டை நாய்களை எதிர்த்து விரட்டத் துவங்கியது. வீரமூட்டும் சக்தி அந்த நிலத்திற்கு இருப்பதை அறிந்து வியந்து, தமது பாட்டன் 'பாஞ்சாலன்' நினைவாக பாஞ்சாலங்குறிச்சி என்று பெயரிட்டு கோட்டை கொத்தளங்களுடன் தலைநகர் அங்கு அமைக்கப்பட்டது. இந்த அரச மரபில் 47வது வேந்தராக வந்தவர் வீரபாண்டிய கட்டபொம்மன்.

ஊமைத்துரை

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு குமாரசாமி என்ற ஊமைத்துரை, துரைச்சிங்கம் என்ற இரு சகோதரர்கள் இருந்தனர். ஈசுவர வடிவு, துரைக்கண்ணு என்ற இரு சகோதரிகளும் கட்டபொம்மனுக்கு இருந்தனர்.

வீரசக்கம்மாள்

2.2.1790 இல் பாஞ்சாலங்குறிச்சியில் அரசுக் கட்டில் ஏறிய

வீரபாண்டிய கட்டபொம்மனது துணைவியார் வீரசக்கம்மாள். இவர்களுக்குப் பிள்ளைப் பேறு இல்லை.

ஆட்சிக் கட்டிலில்

9 ஆண்டுகள், 8 மாதம் 14 நாட்கள் அரசுப் பொறுப்பிலிருந்த வீரபாண்டிய கட்டபொம்மனிடம், கிழக்கிந்தியக் கும்பெனியார் கி.பி. 1793 இல் கப்பம், கிஸ்தி, திரை கேட்டனர். கி.பி. 1797 இல் முதன் முதலாக ஆங்கிலேய ஆலன்துரை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு வந்தார். 1797-1798 இல் முதல்முறையாக போர் தொடுக்கப்பட்டு, போரில் வீரபாண்டிய கட்டபொம்மனிடம் ஆலன்துரை தோற்று ஓடினார்.

ஜாக்சன்

நெல்லை மாவட்டக் கலெக்டர் ஜாக்சன் வீரபாண்டிய கட்டபொம்மனைச் சந்திக்க அழைத்தார். பல இடங்களுக்கு அலைக் கழித்தார். இறுதியில் 10.9.1798 இல் இராமநாதபுரத்தில் பேட்டி கண்டார். அப்போது தந்திரத்தால் வீரபாண்டிய கட்டபொம்மனைக் கைது செய்ய முயன்றார். வீரபாண்டியக் கட்டபொம்மன் போரிட்டு வெற்றி வீரராகப் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்தடைந்தார்.

பானர்மென்

5.9.1799 இல் பானர்மென் என்ற வெள்ளைத் தளபதியால் பாஞ்சாலங் குறிச்சி கோட்டை முற்றுகையிடப்பட்டது; அங்கு கடும் போர் நடைபெற்றது. போரில் பல வெள்ளையர்கள் உயிரிழந்தனர். இருப்பினும் கோட்டை வீழ்ந்து விடும் என்ற நிலையில் வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையை விட்டு வெளியேறினார். 9.9.1799 இல் வெள்ளையர்களால் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை கைப்பற்றப் பட்டது. 1.10.1799 இல் புதுக்கோட்டையில் வீரபாண்டிய கட்டபொம்மன் கைது செய்யப்பட்டார். 16.10.1799 இல் கயத்தாற்றில் தூக்கில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

பாஞ்சாலங்குறிச்சியின் மன்னர்கள்

வீரபாண்டிய நாயக்கர்	கி.பி. 1709 -1736
பால்பாண்டியன்	கி.பி. 1736 - 1760
ஜெகவீரபாண்டியன்	கி.பி. 1760 - 1790
வீரபாண்டிய கட்டபொம்மன்	கி.பி. 1790 - 1799
ஊமைத்துரை	கி.பி. 1799 - 1801

வீரபாண்டிய கட்டபொம்மனின் புகழ் பரப்பிய முன்னோடிகள்

பாஞ்சாலங்குறிச்சி சரித்திரம்

கோவில்பட்டி எஸ். தேவதாஸ் நாயுடு அவர்களைக் கொண்டு 1928இல் 150 பக்கங்களுடன் வெளியான நூல் 'பாஞ்சாலங்குறிச்சி சரித்திரமாகும்.'

கட்டபொம்மு

ஆண்டு குறிப்பிடப்படாமல், தி.நா. சுப்பிரமணியம் அவர்களால் சென்னையிலிருந்து 224 பக்கங்களைக் கொண்டு வெளிவந்த நூல் 'கட்டபொம்மு'.

பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு துரை கதை

அடைக்கலபுரம் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள் இயற்றி 1936இல் 64 பக்கங்களைக் கொண்ட கவிதை நூலாக மதுரையிலிருந்து வெளிவந்தது 'பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு துரை கதை' ஆகும்.

பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் (இரு பாகங்கள்)

17.8.1939இல் ஜெகவீரபாண்டியனாரால் எழுதப்பட்டு மதுரையிலிருந்து 330 பக்கங்களில் வெளிவந்த நூல். இதன் இரண்டாம் பாகம் 16.2.1950இல் 384 பக்கங்களைக் கொண்டு மதுரையிலிருந்து வெளியானது.

வீரபாண்டிய கட்டபொம்மன்

1949இல் 104 பக்கங்களைக் கொண்டு டாக்டர். ம.பொ.சிவஞானம் அவர்களால் எழுதப்பட்ட நூல் வீரபாண்டிய கட்டபொம்மன்.

கயத்தாற்றில் கட்டபொம்மன்

1950இல் 27 பக்கங்களைக் கொண்டு ம.பொ.சிவஞானத்தால் எழுதி வெளியிடப்பட்ட நூல் 'கயத்தாற்றில் கட்டபொம்மன்'.

முதல் முழக்கம்

1967இல் 107 பக்கங்களைக் கொண்டு ம.பொ.சிவஞானத்தால் எழுதி வெளியிடப்பட்ட நூல். 'முதல் முழக்கம்'. இது தவிர்த்து இவரின் 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற இரு பாகநூலிலும் கட்டபொம்மனின் வீர வரலாற்றை விவரித்துள்ளார்.

கட்டபொம்மன் காதை

எட்டயபுரம் ஜமீன் பகுதியில் செம்மப்புதூரில் வாழ்ந்த பாவலர் செ.ரா.சோமசுந்தர மணியகாரரால் 1955ல் பாடப்பெற்ற 48 பக்கங்களைக் கொண்ட கவிதை நூல் 'கட்டபொம்மன் காதை'.

எஸ்.பி. கோவிந்த செட்டியார் அவர்களால் எழுதப்பட்டு 1957இல் 53 பக்கங்களைக் கொண்டு மதுரையிலிருந்து வெளியான நூல். நம் நாட்டு வீரர்கள் எனும் தலைப்பில் வெளியான 'கட்டபொம்மு' ஆகும்.

இராஜபாளையம் பி.கே. சுப்பாராஜ் 1958இல் வெளியிட்ட 176 பக்கங்களைக் கொண்ட நாடக நூல் 'வீரபாண்டிய கட்டபொம்மன்'.

கட்டபொம்மன் வரலாறு

டி. சந்திரசேகரன் பதிப்பித்த சென்னை அரசு வெளியீடான 211 பக்கங்களைக் கொண்ட 1960 இல் வெளியான நூல் 'கட்டபொம்மன் வரலாறு'.நெல்லை எஸ்.எஸ்.மணி, குமரியிலிருந்து 96 பக்கங்களைக் கொண்டு வெளியிட்ட நூல் 'பாஞ்சாலங்குறிச்சியின் வீரவரலாறு' ஆகும்.

செவாலியர் சிவாஜிகணேசன்

உலகப் பெருநடிகர், நடிப்பிற்கு இலக்கணம் வகுத்த செம்மல் திருமிகு.சிவாஜிகணேசனின் அனல் பறக்கும் வசனங்களுடன் வெளியான வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்படம், தமிழ் உலகில் ஏன் அகிலமெங்கும் வீரபாண்டிய கட்டபொம்மனின் புகழைப் பரப்பியது. பாமரரும், படித்தவர்களும் போற்றும் வகையில் அமைந்த அந்த திரைப்படத்தினை பத்மினி பிக்சர்ஸ் தயாரித்து, பி.ஆர். பந்துலு இயக்கி, சக்தி கிருஷ்ணசாமி திரைக்கதை வசனமெழுதினார்; அந்த 'வீரபாண்டிய கட்டபொம்மன்' திரைப்பட வசனம் 56 பக்கங்களைக் கொண்ட நூலாக வெளிவந்துள்ளது.

எம்.இ. வீரபாகு பிள்ளை, பி.ஏ.எல்.டி. அவர்களால் 1961இல் எழுதிய 112 பக்கங்களைக் கொண்டு வெளியான நூல் 'வீரபாண்டிய கட்டபொம்மன்'. சா. சண்முகவேலு 100 பக்கங்களில் எழுதிய நாடக நூல் 'வீரபாண்டிய கட்டபொம்மன்'.

டாக்டர் கலைஞர்

வெள்ளையர் காலத்தில் வீழ்த்தப்பட்ட பாஞ்சாலங்குறிச்சி கோட்டையினை தமிழக அரசு புதுப்பித்தது. புதிய கோட்டையை எழுப்பியது. வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுகளுக்கு பல்வேறு உதவிகளை வழங்கியது. அவர்களுக்கு குடியிருப்புக்கள் கட்டப்பட்டது. பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரத்தினை இன்றைய தலைமுறையினரும்

அறியும் வண்ணம் ஒட்டப்பிடாரத்திலிருந்து பாஞ்சாலங்குறிச்சி வரை வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டது. ஆண்டுதோறும் அரசு சார்பில் விழா எடுக்கப்பட்டு வருகிறது. தி.மு.கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான டாக்டர் கலைஞர் அவர்கள் இவைகளுக்கு காரணமானவர் என்பதை தமிழகம் அறிந்த ஒன்றாகும்.

வீரபாண்டியம்

வீரபாண்டியம் 784 பக்கங்களில் 1967இல் செகவீரபாண்டியனார் எழுதி மதுரையில் வெளியானது.

கலியுகப் பெருங்காவியம்

அச்சில் வராதது. நமச்சிவாயம் என்ற புலவரால் எழுதப்பட்டது. 40 அத்தியாயங்களைக் கொண்டது.

கோவிற்பட்டி தாலுகா கச்சேரி தளவாய்புரத்தைச் சேர்ந்த எஸ்.முனியசாமிப் புலவரால் பாடப்பட்ட 17 பக்கங்களைக் கொண்ட திருமதி எஸ்.சோமசுந்தரத்தம்மையாரால் (பாஞ்சாலங்குறிச்சி) வெளியிடப்பட்ட நூல் பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் இன்னிசைக் கீதமாகும்.

வீரபாண்டிய கட்டபொம்மன் ஆய்வுத் தொகுப்பு

56 பக்கங்களைக் கொண்டு சென்னை மக்கள் வெளியீடாக வெளி வந்த நூல் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆய்வுத் தொகுப்பாகும்.

சீரஞ்சிவியால் மூன்று பிரிவுகளாக நாட்டுப்புற பாடல்களையும் இணைத்து எழுதப்பட்ட 390 பக்கங்களைக் கொண்ட நூல் ‘வீரபாண்டிய கட்டபொம்மன்’.

கட்டபொம்மன் காதை

நாகர்கோவில் வித்துவான் ஈ.பண்டாரம் நம்பியாரால் 1967இல் எழுதப் பட்டு 91 பக்கங்களைக் கொண்டு வெளியான நூல் ‘கட்டபொம்மன் காதை’.

சென்னையிலிருந்து 1968இல் 64 பக்கங்களைக் கொண்டு புலவர் செந்துறை முத்துவால் எழுதி வெளிவந்த நூல் ‘வீரபாண்டிய கட்டபொம்மன்’ ஆகும். 1968இல் எம்.வி. வெங்கட்ராம் அவர்களால் எழுதப்பட்ட, 53 பக்கங்களைக் கொண்ட நூல் ‘நாட்டுக்கு உழைத்த நல்லவர் வீரபாண்டிய கட்டபொம்மன்’ ஆகும். 16 பக்கங்களைக் கொண்ட ‘வீரபாண்டிய கட்டபொம்மன் வீரவரலாறு’ எனும் நூலும் வெளிவந்துள்ளது.

வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல்

மதுரைப் பல்கலைக்கழகத்தால் 1971இல் 214 பக்கங்களில் நா. வானமாமலை தொகுத்து வெளிவந்த நூல் ‘வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல்’ ஆகும்.

1936இல் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள் இயற்றி வெளிவந்த 'பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு துரை கதை' எனும் நூலை பெயர் குறிப்பிடாமல், நா. வானமாமலை 1972இல் 76 பக்கங்களாக மதுரைப் பல்கலைக்கழகம் வாயிலாக வெளியிட்ட நூல் 'கட்டபொம்மு கூத்து'

1974இல் 28 பக்கங்களைக் கொண்டு வெளியான நூல் 'வீரபாண்டிய கட்டபொம்மன் வீரவரலாறு' ஆகும். 1979இல் 123 பக்கங்களைக் கொண்டு எஸ்.என்.கே. ராஜன் என்பவரால் எழுதப்பட்டு சென்னையிலிருந்து வெளியான நூல் 'பாஞ்சாலங்குறிச்சிப் போர்' ஆகும்.

The First Patriot Veera Pandya Kattabomman

1980இல் 76 பக்கங்களுடன் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில நூல் The First Patriot Veera Pandya Kattabomman ஆகும்.

எஸ்.வி. ரமணி அவர்களால் 64 பக்கங்களைக் கொண்டு 1984இல் வெளியிடப்பட்ட நூல் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' ஆகும்.

வீரபாண்டிய கட்டபொம்மு விவாத மேடை

வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றில் நாட்டுப்புறப் பாடல்களை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற வே. மாணிக்கம் அவர்களால் தொகுக்கப்பெற்ற, மாநிலத் தமிழ்ச் சங்கம் 1983இல் வெளியிட்ட 87 பக்கங்களைக் கொண்ட நூல் 'கட்டபொம்மன் கும்மிப்பாடல்'. அவர்களால் 1992இல் 108 பக்கங்களைக் கொண்டு வெளியிடப்பட்ட நூல் 'வீரபாண்டிய கட்டபொம்மு விவாத மேடை'. இந்த நூலில் கட்டபொம்மனின் வீரத்திற்கு மாசு கற்பித்து புனைந்துரைத்த தமிழ்வாணன், சிரஞ்சீவி ஆகியோரின் சுயரூபங்களை ஆராய்ந்து வெளியிட்டுள்ளார்.

கோவிற்பட்டி கவிஞர் ஆ. முத்துராமலிங்கம் அவர்களால் 1986இல் 16 பக்கங்களைக் கொண்டு வெளியிடப்பட்ட பாடல் நூல் %கட்டபொம்மன் அடிச்சுவட்டில்' ஆகும். 1988இல் 22 பக்கங்களைக் கொண்டு 'வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாறு' என்ற நூலும் வெளிவந்துள்ளது.

ஏ.ஜே. ஸ்டூவர்ட்

1879இல் 210 பக்கங்களைக் கொண்டு வெளியான 'A Manual of the Tinnevelly District in the Presidency of Madras' என்ற ஏ.ஜே. ஸ்டூவர்ட் எழுதிய ஆங்கில நூலில் 54வது பக்கத்திலிருந்து சில பக்கங்கள் கட்டபொம்மன் வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

பிஷப் கால்டுவெல்

1881இல் 300 பக்கங்களைக் கொண்டு வெளியான 'A Political and General History of the District of Tinnevelly in the Presidency of Madras from the Earliest Period ot its cession in the Government in AD 1801' என்ற ஆங்கில நூலில் 134 வது பக்கத்திலிருந்து சில பக்கங்கள் கட்டபொம்மன் வரலாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

எச்.ஆர். பேட்

1917இல் எச்.ஆர். பேட் என்பவரால் எழுதப்பட்ட 'Madras district Gazetteers Tinnevelly' என்ற 529 பக்கங்களைக் கொண்ட நூலில் 77வது பக்கத்திலிருந்து கட்டபொம்மன் வரலாற்றினைக் காணலாம்.

ஆர்.எல். ராவ்

ஓய்வு பெற்ற கேப்டன் ஆர்.எல். ராவ் என்பவர் 1981 ஜுன் மாத 'imprint' என்ற இதழில் பக்கம் 19 முதல் 22 வரை எழுதிய 'Court Martial of a Poligar Chief' என்ற கட்டுரையில் வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றிய பல செய்திகளை விரிவாகவே சொல்லியுள்ளார்.

திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்

எட்டயபுரம் எஸ். குருநாத தாஸப்பிள்ளை அவர்களால் 1931இல் 363 பக்கங்களில் எழுதப்பட்ட நூலில் 'தற்காலத்தியது' என்ற பகுதியில் 220வது பக்கத்திலிருந்து பாஞ்சாலங்குறிச்சி சண்டைகள் உட்பட வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றினை எட்டயபுரத்திற்குரிய விசுவாசத்துடன் எழுதியுள்ள நூல் 'திருநெல்வேலிச் சீமைச்சரித்திரம்'.

திருவிடைமருதூர் வ.வேணுகோபாலனின் 56 பக்கங்களைக் கொண்ட 1958இல் வெளியான 'துரோகி கட்டபொம்மன் தியாகியா?' என்ற நூலும், 364 பக்கங்களைக் கொண்டு 1965 இல் வெளிவந்த தமிழ்வாணன் எழுதிய 'கட்டபொம்மன் கொள்ளைக்காரன்' என்ற நூலும், இட்டுக்கட்டி, பொய்யாகப் புனைந்துரைக்கப்பட்ட நூற்களாகும். (கட்டபொம்மன் காலத்தில் எட்டயபுரத்தாரும் புதுக்கோட்டை அரசரும் இருந்தார்கள் அல்லவா? அவர்களைப் போலவே, இக்காலத்திலும் சிலர் வேண்டாமா?)

நாட்டுப்புறப்பாடல்கள்

பாஞ்சைக்கோவை, வீரபாண்டியன் அனுராகமாலை, பேட்டி விருத்தம், கட்டபொம்மு நாடகம், கட்டபொம்மு சண்டைக்கும்மி, கட்டபொம்மன் வில்லடி, கட்டபொம்மன் சிந்து, கட்டபொம்மன் தெம்மாங்கு இன்னும் இயற்றியவர் யாரென்று தெரியாத நாட்டுப்புறப்பாடல்கள் பலவும், எனது பார்வையில் படாத பல நூற்களும் இருக்கக்கூடும். சென்னையில் தமிழக அரசின் ஆவணக்காப்பகத்தில் உள்ள பல பதிவேடுகளிலும் வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாறு கூறப்பட்டிருப்பதையும் அறிய முடிகிறது.

கட்டபொம்மன் வரலாற்றினைப் பறைசாற்றும் கும்பெனியார் கால நூற்கள்

கர்னல் ஜேம்ஜ்வெல்ஷ் - ஜே.எப். கீரான்ஸ்

1830இல் இலண்டனிலிருந்து வெளியான பாஞ்சாலங்குறிச்சியின் பிந்தையப் போரில் நேரடியாகப் பங்கு கொண்ட கர்னல் ஜேம்ஜ் வெல்ஷின் 'இராணுவ நினைவுகள்' நூலின் 57வது பக்கத்திலும், அதனைத் தொடர்ந்தும் வீரபாண்டிய கட்டபொம்மனைப்பற்றி சொல்லியுள்ளார்.

1873இல் பாளையங்கோட்டையிலிருந்து வெளியான 'பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் சரித்திரம்' என்ற அருட்திரு.ஜே.எப்.கீரான்ஸ் தொகுத்த 141+14 = 155 பக்கங்களைக் கொண்ட நூலில் வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாறு மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இதோ அந்த நூல்களின் முகப்புப் பக்கங்கள்...

MILITARY REMINISCENCES.

EXTRACTED FROM

A JOURNAL

OF NEARLY

FORTY YEARS' ACTIVE SERVICE

IN THE

EAST INDIES.

BY COLONEL JAMES WELSH,

OF THE MADRAS ESTABLISHMENT.



"The battles, sieges, fortunes, I have pass'd
From boyish days."

VOL. I.

LONDON:
SMITH, ELDER, AND CO. CORNHILL.
MDCCCXXX.

SOME ACCOUNT

OF THE

PANJALAMCOURCHY POLEGAR

AND THE STATE OF

TINNEVELLY

PREVIOUS TO

MAJOR BANNERMAN'S

EXPEDITION IN

1798.

COMPILED FROM THE

RECORDS OF GOVERNMENT

BY

REV. J. F. KEARNS.

Palamcottah:

PRINTED BY ORDER OF GOVERNMENT AT THE CHURCH MISSION PRESS,

BY J. DEVANAYAGAM PILLAY.

1873.

கட்டபொம்மனின் கடைசி நாட்கள்....

மூண்டது போர்

பாருக்குள்ளே நல்ல நாடாம் நம் பாரதத் திரு நாட்டிற்கு கண்ணாடியும் சீப்பும் விற்க வந்த வெள்ளையரின் மண்ணாசை வெறி தலைக்கேறியது; தென்னாட்டில் உள்ள பாளையக்காரர்கள் எல்லோரும் தாங்கள் இருக்கும் திக்கு நோக்கி வந்து திறை செலுத்த வேண்டுமென்று ஆணையிட்டனர். பலர் ஓடிச்சென்று திறை செலுத்தினர்; பலர் மண்டியிட்டனர்; தான் உயிர் நீக்க நேரினும் வரிசெலுத்த முடியாதென்று சிலர் கூறினர்; வெள்ளையரை எதிர்த்து நின்றனர். பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன் 'வானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன் காணிக்கு கிஸ்தி ஏது?' என்று வீரமுழக்கமிட்டார்; திறை செலுத்த மறுத்தார்; வெகுண்டெழுந்த வெள்ளையர் போருக்குத் தயாராயினர்; விளைவு மூண்டது போர்; கிளம்பிற்று கும்பினிப் படைகள் . . . . .

பாளையங்கோட்டையிலிருந்து புறப்பட்ட படை

மேஜர்ஜாண்பானர்மென் என்ற தளபதி தனது ஆங்கிலக் கும்பினிப் பட்டாளத்துடன் 1799 செப்டம்பர் 4 இல் பாளையங்கோட்டையிலிருந்து புறப்பட்டு பாஞ்சாலங் குறிச்சி நோக்கி சீவலப்பேரி மார்க்கமாக விரைந்து சென்றார்.

காப்டன் ஒரீலி (O' Reilly) ப்ரூஸ் (Bruce) காலின்ஸ் (Collins) டக்ளஸ் (Douglas) டார்மீக்ஸ் (Durmieux) ப்ளேக் (Blake) ப்ரௌன் (Brown) போன்ற ஆங்கிலேய அதிகாரிகளும் பாஞ்சாலங்குறிச்சியைச் சுற்றி தங்களது படைவீரர்களுடன் போருக்கு ஆயத்தமாக நின்றனர்.

வெள்ளையர் படை 5.9.1799 காலையில் பாஞ்சாலங்குறிச்சியை வந்தடைந்தது. கோவில்பட்டியிலிருந்தும், கயத்தாற்றிலிருந்தும் இராணுவ வீரர்கள் வந்து வெள்ளையர் படையோடு சேர்ந்து கொண்டனர். லெப்டினென்ட் டல்லாஸ் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை தனது குதிரைப் படையுடன் சுற்றி வளைத்துக் கொண்டார்.

தமிழர் படை

வீரபாண்டிய கட்டபொம்மனின் படையில் சிவத்தையா நாயக்கர், தானாபதிப் பிள்ளையின் தம்பி வீரபத்திரபிள்ளை, சம்பிரதி பொன்னப்ப பிள்ளை, பாதர் வெள்ளை எனப்படும் வீரன் வெள்ளையத்தேவன், தன்னலங் கருதாத ஊமைத்துரை, தளபதி சுந்தரலிங்கம் மற்றும் பலரும் இருந்தனர்.

வெள்ளையர் அனுப்பிய தூது

போர் துவங்குவதற்கு முன்னர் மேஜர் ஜான் பானர்மென் தம்முடைய துபாஷியான ராமலிங்க முதலியாரை ஹவில்தார் இப்ராஹிம் கான், அரிக்கரன்சாமி ஆகியவர்களுடன் பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்குள் அனுப்பி வைத்தார்; அவர்கள் கட்டபொம்மனைச் சந்தித்தனர். பின்னர் 'கட்டபொம்மன் பானர்மென்னைச் சந்திக்கும்படி சொல்லி அனுப்பிய' செய்தியையும் கட்டபொம்மனிடம் தெரிவித்தனர்.

தனக்கு எழுத்து மூலமாக ஏதேனும் ஓர் உத்திரவு வந்தாலன்றி, மேஜர் பானர்மென்னைப் பார்க்க முடியாது என்று கட்டபொம்மனும் அதற்குப் பதில் சொல்லி அனுப்பினார்.

" I lost no time in ordering the polegar to surrender at discretion to the company. If i would grant a written cowl, he said he would come to me; but not without."

அரசின் செயலாளரான ஜோசையா வெப்பிற்கு (Josiah Webbe) 5.9.1799 இல் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து மேஜர் ஜான் பானர்மென் எழுதிய கடிதத்தின் வரிகள் இவை.

சமரச முயற்சிகள் பலனளிக்கவில்லை; வெள்ளையருக்கு அடங்கி ஒடுங்கிப் போகவும், திறை செலுத்திடவும் அஞ்சா நெஞ்சங் கொண்ட வீரபாண்டிய கட்டபொம்மன் தயாராக இல்லை. காலத்தால் அழியாத, வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கின்ற பாஞ்சாலங்குறிச்சிப் போர் துவங்கிற்று.

வீழ்ந்த வெள்ளையர்கள்

பாஞ்சாலங்குறிச்சியின் தெற்குக் கோட்டை வாசலும், வடக்குக் கோட்டை வாசலும் வெள்ளையரின் படையினரால் தாக்கப்பட்டது. போரில் வெள்ளையர் பக்கம் சேதம் அதிகமாக இருந்தது. நான்கு ஐரோப்பிய அதிகாரிகள் போரில் கொல்லப்பட்டனர்; இரண்டு பேர் காயம் பட்டனர்.

போர் வேகமாக நடைபெற்றது. வெள்ளையரின் பேய்வாய்ப் பீரங்கிகள் கோட்டைச் சுவர்களைத் துளைத்து உடைத்தெறியத் தலைப்பட்டன.

கோட்டை விழுந்து விடுமோ என்ற நிலை ஏற்படலாயிற்று. தீவிர ஆலோசனை செய்தார் வீரபாண்டிய கட்டபொம்மன்.

கோட்டையை விட்டு வெளியேறியது

'திருச்சி வரை சென்று ஆங்கிலேய மேலதிகாரிகளைச் சந்தித்து, விரைவில் வந்து விடுகிறேன்' என்று வீட்டாரிடம் விடைபெற்று விட்டு, ஒரு தண்டிகை, ஏழு குதிரைகள், ஐம்பது வீரர்கள், தம்பியர், தானாபதிகளோடு இரவு பதினொரு நாழிகையில், சித்தார்த்தி வருடம் ஆவணி மாதம் 22 ஆம் நாள் (7.9.1799) இரவு 10.30 மணிக்கு பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை விட்டு வீரபாண்டிய கட்டபொம்மன் வெளியேறி வடதிசை வழியே விரைந்து சென்றார்.

நாகலாபுரம்

பொழுது விடிவதற்குள் வீரபாண்டிய கட்டபொம்மன் நாகலாபுரத்தை அடைந்தார். அங்கு இரவப்ப நாயக்கர் அவரை அன்போடு உபசரித்தார். அங்கிருந்து விடைபெற்று கோசுகுண்டு வழியாக கோலார்பட்டியை வந்தடைந்தார். அங்கு இராஜகோபால நாயக்கர் அவரை எதிர் கொண்டழைத்து அன்போடு உபசரித்தார்.

கோட்டை பிடிபட்டது

சித்தார்த்தி வருடம் ஆவணி மாதம் 24 ஆம் நாள் 9.9.1799 காலை பத்து நாழிகையில், பாஞ்சாலங்குறிச்சி கோட்டையினை மேஜர் பானர்மென் கைப்பற்றிக் கொண்டார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் வெளியேறிச் சென்றிருக்கும் திசையைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்ட மேஜர் பானர்மென் பல பாளையக்காரர்களுக்கும் கடிதங்கள் அனுப்பி வீரபாண்டிய கட்டபொம்மனைப் பிடிப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

பானர்மென் கடிதம்

'ஒவ்வொருவருடைய குணத்திற்கும் கட்டபொம்மன் மீது கொண்டிருக்கும் அவர்களுடைய அபிப்பிராயத்திற்கும் ஏற்றவாறு வெவ்வேறு விதமாக அந்தப் பாளையக்காரர்களுக்கு பானர்மென் கடிதம்

எழுதியதாக அவரே அரசுக்கு 11.9.1799 இல் நாகலாபுரத்திலிருந்து எழுதிய கடிதத்தின் மூலம் தெரிவித்திருக்கிறார்.

. . . . that I found it necessary to very the style of my letters to the different polegars, according to the knowledge I had of their characters, and what I knew of their dispositions towards Cataboma Naig."

(வெள்ளையரின் வஞ்சக எண்ணமும், நம்மவர்களை அவர்கள் எப்படி யெல்லாம் ஏமாற்றியிருக்கிறார்கள் என்பதற்கு இந்தக் கடிதம் சான்று பகர்கிறது.)

பிடித்திடத் தயாரான படைகள்

லெப்டினென்ட் டல்லாஸ் தலைமையில் இரண்டு குதிரைப் படைகளையும், காப்டன் ஓரெய்லி தலைமையில் 400 குண்டு வீச்சாளர்களையும் (grenadiers) இடது பக்கமாக அனுப்பி வைத்துவிட்டு முக்கிய படைகளுடன் மேற்கு பக்கமாக மேஜர் பானர்மென் செல்லவும் திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி சிறிது தூரம் சென்றதும் எட்டயபுரம் பாளையக்காரர் தனது படை வீரர்களுடன் கட்டபொம்மனைப் பிடிப்பதற்குச் செல்வதாகவும், தனக்கு உதவியாக மேலும் சிப்பாய்களை அனுப்பும்படியும் தகவல் தந்தார். அதன்படி காப்டன் ஓரெய்லியும், லெப்டினென்ட் டல்லாஸூம் எட்டயபுரம் படையினருக்கு துணையாகச் சென்றனர்.

கோலார்பட்டியில் கடும் போர்

கோட்டையை விட்டு வெளியேறிச் சென்ற வீரபாண்டிய கட்டபொம்மனை கோலார்பட்டி கோட்டைப் பகுதியில் எட்டயபுரத்தாரின் படைகள் 10.9.1799 இல் எதிர்கொண்டன. அங்கு போர் நடைபெற்றது. இரு தரப்பிலும் பெரிய சேதமேற்பட்டது. கட்டபொம்மனது படையினர் வீரப் போரிட்டனர். வெள்ளையர் தரப்பில் 37 பேர்களும், கட்டபொம்மன் தரப்பில் 16 பேர்களும் போரில் மாண்டனர். ஆறு பேர்களுடன் குதிரைகளில் ஏறி வீரபாண்டிய கட்டபொம்மன் அங்கிருந்து தப்பிச் சென்றார்.

தானாபதி சிவசுப்பிரமணியபிள்ளை, அவரது தம்பி வீரபத்திரபிள்ளை, ஆதனூர் வெள்ளைச்சாமி நாயக்கர், அல்லிக்குளம் சுப்பா நாயக்கர், முள்ளுப்பட்டி முத்தையா நாயக்கர், கொல்லம்பரும்புக் குமாரசாமி நாயக்கர் முதலிய 34 பேர்களை வெள்ளைக் கும்பினியார் கைது செய்தனர்.

தானாபதி சுப்பிரமணிய பிள்ளை

கோலார்பட்டி போரின் போது தானாபதி சுப்பிரமணியபிள்ளை கைது செய்யப்பட்டதற்காக எட்டயபுரத்துப் படையினருக்கு வெள்ளையர் தகுந்த சன்மானங்களை அளித்தனர். நாகலாபுரம் கிராமத்தின் முக்கியப் பகுதியில் சுப்பிரமணிய பிள்ளையை தூக்கிலே தொங்க விட்டு, அவருடைய தலையை வெட்டி எடுத்துச் சென்று ஈட்டியில் வைத்து பாஞ்சாலங்குறிச்சி கோட்டையிருந்த பகுதியில் காட்சிப்பொருளாக வைத்தனர்.

சௌந்திரபாண்டிய நாயக்கர்

நாகலாபுரம் பாளையக்காரரின் தம்பியாகிய சௌந்திரபாண்டிய நாயக்கர் 12.9.1799 இல் கைது செய்யப்பட்டார். பின்னர் சர்ஜன் எனும் தளகர்த்தரின் தலைமையில் பலத்த பாதுகாப்புடன் இராமநாதபுரம் எல்லையிலுள்ள கோபாலபுரம் கிராமத்திற்கு கொண்டு சென்று, 13.9.1799 காலையில் அங்கு அவரும் தூக்கிலே தொங்கவிடப்பட்டார்.

நாடு கடத்தப்பட்டவர்கள்

நாகலாபுரம் ஜமீன் மானேஜர் சாத்தூரப்பபிள்ளை, கோலார்பட்டி ஜமீன்தாரின் மைத்துனரும் மானேஜருமான சவுந்தரலிங்க நாயக்கர், குளத்தூர்த் தானாபதி ஆறுமுகம் பிள்ளை, காடல் குடித்தானாபதி கோமதிநாயகம் பிள்ளை, ஏழாயிரம் பண்ணைத் தானாபதி தருமப் பெருமாள்பிள்ளை ஆகிய ஐவரையும் ஆயுள்காலம் வரை அயலிடம் செல்ல ஆணை பிறப்பிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். நாகலாபுரம் பாளையக்காரர் இரவப்ப நாயக்கரையும், ஏழாயிரம்பண்ணை பாளையக்காரர் காளைவன்னியனாரையும், குளத்தூர் பாளையக்காரரின் மகன் சின்ன வெட்டூர் நாயக்கரையும் சென்னைப் பட்டிணம் கொண்டு போய் அங்கு அவர்கள் சிறை வைக்கப்பட்டனர்.

கோலார்பட்டி, ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, குளத்தூர் இவை அனைத்தும் கும்பெனியாரின் ஆதிக்கத்தின் கீழ் அப்போது வந்தன.

பட்டக்குதிரை முத்துராம்

அழகும், வேகமும், அறிவும் கொண்ட வெள்ளை நிறங் கொண்ட தனது பட்டக் குதிரை முத்துராமில் இருந்து கொண்டு வடதிசை நோக்கி விரைந்து கொண்டிருந்த வீரபாண்டிய கட்டபொம்மனை ஆங்கில தளகர்த்தர்கள் டல்லாசும், 'போயனும்' விரட்டிக் கொண்டு வந்தனர். கடிய

வேகமுடைய 200 குதிரையாளர்கள், கொடிய வெடி வேல்களை உடைய 1100 படைவீரர்களும் பின் தொடர்ந்தனர். ஆனால் காற்றினும் வேகமாக கட்டபொம்மனின் குதிரை பறந்து சென்றது. கடுவேகமாக நெடுந்தூரம் தாவிப் போக நேர்ந்ததால் பட்டக் குதிரை முத்துராம் தனது ஆவியை இழந்தது. தனது பட்டக் குதிரை இறந்ததைக் கண்ட கட்டபொம்மன் கண்ணீர் சிந்தினார். வேகம் குறைந்து விடும் நிலையில் இருந்த மீதி இரண்டு குதிரைகளையும் வழியிலே விட்டு விட்டு கால் நடையாய் கட்டபொம்மனும் உடன் வந்தவர்களும் நடக்கத் துவங்கினார்கள்.

ஆனியூர்

கல்லிலும் முள்ளிலும் நடந்து வந்த கட்டபொம்மன் சிவகங்கை நாட்டின் வடமேற்கு எல்லையில் மறவர் மரபில் கள்ளர் என்னும் பிரிவினர் தங்கி வாழும் ஆனியூர் என்ற கிராமத்தை வந்தடைந்தார்.

காளிமுத்து - பெரிய நம்பி

இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்த கட்டபொம்மனையும் மற்றும் அவருடனிருந்த ஊமத்துரை, மைத்துனர்கள் முத்தையா நாயக்கர், குமாரசாமி நாயக்கர், முத்துக்குமாரசாமி நாயக்கர் அந்தரங்க ஊழியர் வீரண்ண மணியக்காரன், அண்ணன் ஆகிய ஆறுபேர்களையும் பாதுகாப்புக் கருதி மலைச் சாரலுக்கு அழைத்துச் சென்று மறைவாக இருக்க வைத்த பெருமைக்குரியவர்கள் ஆனியூர் காளிமுத்துவும், பெரிய நம்பியும் ஆகும்.

வீர கஞ்சய நாயக்கர்

ஏழு நாட்கள் ஆனியூரில் கட்டபொம்மன் தங்கியிருந்த வேளையில், ஏழாம் நாள் இரவு காடல்குடி ஜமீன்தார் வீர கஞ்சய நாயக்கர் நேராக வந்து கட்டபொம்மனைச் சந்தித்தார். தானாபதி பிள்ளை தூக்கிலிடப் பட்டதையும், பாளையங்கள் வீழ்ந்த விவரங்களையும் தெரிவித்தார்.

திருக்களம்பூர்

அங்கிருந்து திருச்சிக்கு, புதுக்கோட்டை வழியாகச் செல்லத் திட்டமிட்டார் கட்டபொம்மன். சோளபுரம் என்னும் ஊரை அடைந்தார். அங்குள்ள மடத்தில் தங்கியிருந்தார் கட்டபொம்மன். பின் அங்கிருந்து புதுக்கோட்டைச் சீமையில் திருக்களம்பூர் என்னுமிடத்திற்கு மேற்கில் கலியாப்பூர் என்ற ஊருக்கு அருகிலுள்ள காட்டினை அடைந்தார்.

லூஷிங்டன் கடிதம்

8.9.1799 இல் ராமநாதபுரத்திலிருந்து கலெக்டர் லூஷிங்டன், புதுக்கோட்டை ராஜா விஜயரகுநாத தொண்டைமானுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

'தன்னுடைய குற்றங்களுக்காகவும் கீழ்ப்படியாமைக்காகவும் பாஞ்சாலங் குறிச்சி பாளையக்காரருக்கு (கட்டபொம்மனுக்கு) வெகு நாட்களாக கொடுக்க காத்திருக்கும் தண்டனையை கவர்னர் ஜெனரல் நிறைவேற்றத் தீர்மானித்திருக்கிறார் என்பதை நீர் அறிவீர்! மேஜர் பானர்மென் இதனை நிறைவேற்ற தன்னுடைய படைகளைத் திரட்டிக் கொண்டிருக்கும் போது, கட்டபொம்மு நாயக்கர் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை விட்டு உம்முடைய நாட்டை நோக்கி வந்து கொண்டிருப்பதாக அறிகிறோம். அவரை எவ்வளவு சீக்கிரம் பிடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பிடிக்க வேண்டியது அவசியமாதலால், நீர் இந்தக் காரியத்தில் உம்மை ஈடுபடுத்திக் கொள்வீர் என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்தப் பணியை முடித்துக் கொடுத்தால் (கட்டபொம்மனை பிடித்துக் கொடுத்தால்) உம்மைப் பற்றி கவர்னருக்கு பாராட்டி தெரிவிப்பதோடு, எனக்கும் மகிழ்ச்சியாக இருக்கும். இந்தப் பணியில் உமது ஈடுபாடுகள் கம்பெனி அரசிற்கு உம்முடைய கீழ்ப்படிதலையும், தொடர்பையும், உறவையும் நிரூபிப்பதற்கு சான்றாக அமையும்.''

கலெக்டர் லூஷிங்டனின் இந்தக் கடிதத்திற்கு, புதுக்கோட்டை அரசர் விஜய ரகுநாதத் தொண்டைமான் தமிழில் 14.9.1799 இல் எழுதிய கடிதம், லூஷிங்டனுக்கு 19.9.1799 இல் கிடைத்தது.

வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு வாழ்த்துதலைச் சொல்லிவிட்டு, அந்தக் கடிதத்தில் விஜய ரகுநாத தொண்டைமான் சொல்லியிருப்பதாவது.

விஜய ரகுநாத தொண்டைமானின் கடிதம்

''கட்டபொம்மு நாயக்கரும், நாகலாபுரம் பாளையக்காரரும் கும்பெனிக்கு எதிராக கலகம் செய்ததால், கும்பெனிப் படைகள் அங்கு சென்றபோது தங்களது பாளையங்களை விட்டு வெளியேறி என்னுடைய எல்கையை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும், அவர்களைக் கைது செய்திட வேண்டுமென்று விரும்பியும், நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது.

கும்பெனியின் காரியங்களில் என்னுடைய நெருக்கத்தை நீங்கள் நினைவு கூர்ந்த இந்தச் செயல் என்னால் சொறகளால் விவரிக்க முடியாத

மகிழ்ச்சியை எனக்கு ஏற்படுத்துகிறது. கும்பெனிக்கு சேவை செய்வதைவிட வேறு எந்த நல்ல காரியம் எனக்கு இருக்க முடியும்? கும்பெனியாரின் கருணையைப் பெறுவதற்கு இது தகுதியாக இருக்கிறது. துவக்க காலம் முதல் நான் கும்பெனியாரிடம் நெருக்கமாக இருந்து வந்திருக்கிறேன். கும்பெனியுடன் உள்ள விசுவாசந்தான் என்னுடைய வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகும்.

திப்பு சுல்தானுக்கு எதிராகச் சென்ற புதுக்கோட்டைப் படைகள்

திப்பு சுல்தானுக்கு எதிராக நடந்த போரில் கர்னல் பிரௌனுக்கு 5000 ஆடுகளையும், 2000 போர் வீரர்களையும் நம்பத் தகுந்த தலைவர்களுடன் ஸ்ரீரங்கப் பட்டணத்திற்கு அனுப்பி வைத்து அங்கே அவர்கள் எவ்வளவு நம்பிக்கையுடன் நடந்து கொண்டார்கள் என்பதையெல்லாம் தாங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

உங்களுடைய கடிதம் கிடைத்த அடுத்த நொடியே பல்வேறு படைப் பிரிவுகளை என்னுடைய நாட்டின் எல்கைகளுக்கு அனுப்பி வைத்துள்ளேன். அவர்கள் மிகுந்த விழிப்புடன் செயல்படுகிறார்கள். இந்தப் பாளையக்காரர்கள் என்னுடைய எல்லையை நெருங்கினால், கடவுளுடைய கிருபையால் என்னுடைய நெருக்கமும் உண்மையும் வெளிப்படுத்தப்படும் (அதாவது கட்டபொம்மனை எப்படியும் பிடித்துக் கொடுத்து விடுவேன்).

கும்பெனிக்காக உயிரை விடவும் தயார்

சர்வ வல்லமையுள்ள இறைவனின் கோவிலில் நான் எடுத்துக் கொள்ளும் முதல் பிரார்த்தனை என்னவென்றால் கம்பெனியார் எனக்கு கொடுக்கும் எந்தப் பணியிலும் என்னுடைய உயிரைக் கொடுத்தாவது நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்பதே. இதற்கு மேல் நான் என்ன எழுதிட? என்பால் உங்கள் நட்பு மேலும் வளரட்டும்''.

இந்த ஒரு கடிதத்தோடு மட்டும் விஜயரகுநாத தொண்டைமான் நிற்க வில்லை. திரும்பவும் 16.9.1799 இல் லூஷிங்டனுக்கு புதுக்கோட்டை அரசர் தமிழில் எழுதிய கடிதம் 26.9.1799 இல் கிடைக்கிறது. அதில் 'எல்லா வகையிலும் கும்பெனியின் ஆதரவாளர் நான்; உங்களுடைய சொந்த ஆட்களைப் போல என்னை ஒருவனாக நினைத்து உங்களுடைய நெஞ்சம் நிறைந்த நட்பினை எனக்கு நல்கிட வேண்டும். இதற்கு மேல் என்ன எழுத? என்பால் உங்களது நட்பு என்றும் வளரட்டும் என்று திரும்பவும் கடிதம் எழுதி

தனது 'வெள்ளையர் விசுவாசத்தை' நிரூபித்துக் கொண்டார் புதுக்கோட்டை அரசர் விஜயரகுநாத தொண்டைமான்.

புதுக்கோட்டையார் பிடித்துக் கொடுத்தது

24.9.1799 இல் புதுக்கோட்டை அரசர் விஜயரகுநாத தொண்டைமான் எழுதிய கடிதம் 29.9.1799 இல் கலெக்டர் லூஷிங்டனுக்கு கிடைத்தது. கும்பெனியாரை வாழ்த்தித் துவங்கும் அந்தக் கடிதம் தரும் விபரம் இதோ:

''மலைகளிலும் குன்றுகளிலும் எல்லாப் பக்கமும் என்னுடைய படையினரை பகைவர்கள் மறைந்திருக்கும் இடத்தை கண்டுபிடிப்பதற்காக நிறுத்தி வைத்திருந்தேன். இறைவனின் கிருபையாலும், கும்பெனியாரின் செழிப்பினாலும், மற்றும் என்னுடைய நல் அதிர்ஷ்டத்தாலும் சிவகங்கை தாலூகாவிலுள்ள கலியாப்பூர் என்ற ஊரிலுள்ள காட்டிலே, (அந்தக் காடானது எனது நாட்டிலுள்ள திருக்களம்பூருக்கு மேற்குப் பக்கமுள்ளது) கட்டபொம்மனும் அவனது தம்பி ஊமத்துரையும் மற்றும் அவர்களது உறவினர்கள் ஆக ஏழு பேர்களுடன் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, நேற்று இரவு எனது படைகளை அனுப்பி அவர்களைச் சூழ்ந்து கொண்டு மிகுந்த எச்சரிக்கையுடனும், முயற்சியுடனும் அவர்கள் கைது செய்யப்பட்டனர். (சர்தார் திருக்களம்பூர் முத்துவைரவ அம்பலக்காரர் தலைமையில் சென்ற படை கட்டபொம்மனைப் பிடித்தது. இவரைப் புகழ்ந்து பாடிய கும்மிப்பாடலும் இருக்கிறது)

உயிரைவிடத் துணிந்த உத்தமன்

கலியப்பூர் காட்டிலே கைது செய்யப்பட்டபோது தன்னைத் தானே கொன்று உயிரை மாய்த்துக் கொள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் முன் வந்தான்.

"Cattaboma Naig at the time he was seized, wished to have slain himself, but my people having bound hishands kept him in Confinement"

''ஆனால் எனது படையினர் கட்டபொம்மனது கரங்களைக்கட்டி கைது செய்து கொண்டு வந்து விட்டார்கள்.

கட்டபொம்மனைப் பற்றி உங்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும். அவரைப் பாதுகாப்பாக ஒரு நாள் வைத்துக் கொள்வது கூட மிகவும் கடினமான காரியமாகும்.''

'The Particulars of this polegar are well known to you, to keep him in safety one day is extremely difficult."

என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டதிலிருந்து கட்டபொம்மன் புதுக்கோட்டை அரசரின் ஆட்களால் பிடிக்கப்பட்டபோது உயிரை விட அங்கேயே முன் வந்த செய்தியையும், 'ஒருநாள் கூட அவரைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது கடினம்' என்ற கடிதவரிகளால், கட்டபொம்மனின் பேராற்றலையும் நாம் நன்கு உணர முடிகிறது.

கட்டபொம்மன் கைதுசெய்யப்பட்ட போது அவர்களிடம் ஐந்து பட்டாக் கத்திகள், நான்கு .பிச்சுவாக்கள், ஒரு கத்தி, ஒரு பாக்குவெட்டி ஆகியவையும் இருந்தன.

பானர்மெனின் பகைமை உள்ளம்

கட்டபொம்மன் கைது செய்யப்பட்டதை அறிந்ததும் மேஜர் பானர்மென் உடனே கட்டபொம்மனையும் அவரைச் சேர்ந்தவர்களையும் தகுந்த பாதுகாப்புடன் மதுரையிலிருக்கும் கமாண்டிங் ஆபிசரிடம் ஒப்படைக்கக் கோரி *29.9.1799* இல் கயத்தாற்றிலிருந்துகொண்டு, ஜோசய்யாவெப் என்ற அரசுச் செயலாளருக்கு அவசரக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்திலேயே மேஜர் பானர்மென் தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

''கும்பெனி அரசுக்கு எதிராக கலகம் விளைவிக்கும் பாளையக்காரர் களுக்கு மரண தண்டனை விதித்திட எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை மேற்கொள்ள கட்டபொம்மு நாயக்கரை மதுரையிலிருந்து கயத்தாற்றிற்கு கொண்டுவர எனது ராணுவத்தினரின் ஒரு பிரிவை அங்கு அனுப்பி வைக்கிறேன். உங்களின் முந்தையப் பிரகடனப்படி கட்டபொம்மு நாயக்கர் அரசுக்கு எதிராகக் கலகம் விளைவித்தவர் என்று சூழ்நிலைகளினால் குறிப்பாக சுட்டிக்காட்டப்படுவதால் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை எனது கடமையாகவே கருதுகிறேன் என்று குறிப்பிட்டிருப்பதன்மூலம் கட்டபொம்மனை தூக்கிலே போடுவது என்று ஏற்கனவே பானர்மென் முடிவு செய்துவிட்டது புலனாகிறது.

கயத்தாற்றில் கட்டபொம்மன்

வெள்ளைக் கும்பெனிப் படையினரால் மதுரையிலிருந்து 5.10.1799 இல் வீர பாண்டிய கட்டபொம்மன் கயத்தாற்றிற்கு கொண்டு வரப்பட்டார்.

அங்கு திருநெல்வேலி பாளையக்காரர்கள் எல்லோரையும் வரவழைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டத் தயாரானார் மேஜர் பானர்மென்.

16.10.1799 இல் மந்தமான பனி படர்ந்த வேளையில் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்த வேளையில் தென்பகுதியைச் சேர்ந்த பாளையக்காரர்கள், குறிப்பாக திருநெல்வேலி சீமையைச் சேர்ந்தவர்களும் நூற்றுக் கணக்கில் கூடியிருந்தனர். அவர்களுக்கு கௌரவமான இருக்கைகள் அளிக்கப்பட்டு, மற்றைய பாளையக்காரர்கள் அங்கு வரிசை வரிசையாக உட்கார்ந்திருந்தனர்.

சூரியன் உதயமாகி நாழிகை ஏழானது; சிறையிலிருந்த கட்டபொம்மனை படையினர் மிகுந்த பாதுகாப்புடன் அழைத்து வந்தனர். (வீரபாண்டிய கட்டபொம்மனை சிறை வைத்திருந்த அந்தக் கட்டிடம் இன்றும் கயத்தாற்றில் உள்ளது; இடிந்து பாழாகி வரும் அந்த வரலாற்றுச் சிறப்பிற்குரிய கட்டிடத்தை தமிழக அரசு பாதுகாத்து நினைவுச் சின்னமாக்கிட வேண்டும்).

மேஜர் பானர்மென் அங்கு விசாரணையைத் துவங்க ஆரம்பித்தார். ராபர்ட் ட்யூரிங் (Robert Turing) ஜார்ஸ் ஹுயஸ் (George Hughes) பிர்கட்டு (Pirkett) பிரௌன் (Brown) முதலிய தளகர்த்தனர் பானர் மென்னுடைய இருபக்கமும் அமர்ந்திருந்தனர்.

குதிரைப்படைகளும், காலாட்படையினரும் டர்னர் (Turner) டல்லாசு (Dollas) தலைமையில் அணிவகுத்து நின்று கொண்டிருந்தனர். 16.10.1799 காலை 10 மணிக்கு கயத்தாற்றில் விசாரணை துவங்கியது.

இராமலிங்க முதலியார்

தொண்டை மண்டிலம் திருமணம் என்ற ஊரில் பிறந்தவர் இராமலிங்கமுதலியார்; மேஜர் பானர்மெனுக்கு (துபாஷி) மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றியவர். கும்பெனியாரின் அந்தரங்க நம்பிக்கைக்குரிய இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்துஸ்தான், பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகளை அறிந்தவர். இவரே அங்கு முதலில் சாட்சியமளித்தார். 5.9.1799 இல் கட்டபொம்மனை பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்குள் சென்று அவர் சந்தித்துப் பேசிய விபரங்களை அங்கு எடுத்துச் சொன்னார்; கட்டபொம்மன் சரணாகதி அடையவேண்டும் என்று வற்புறுத்தியதையும் அதற்கு கட்டபொம்மன் மறுப்புத் தெரிவித்தது பற்றியும் குறிப்பிட்டார்.

இவ்வாறே துபாஷ் இராமலிங்க முதலியாருடன் சென்ற ஹவுல்தார் இபுராகீம்கானும், ஹரிக்கார்சாமி அய்யரும் சாட்சியமளித்தனர்.

கெடி வேட்டூர் நாயக்கர்

5.9.1799 இல் கோட்டைக்குள் கட்டபொம்மனுடன் இருந்த கட்டபொம்மனின் மாமனார் கெடி வேட்டூர் நாயக்கரும், அங்கு சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

சாட்சிகளின் விசாரணை முடிந்ததும் கட்டபொம்மன் மீது கீழ்க்கண்ட குற்றச்சாட்டுக்கள் படிக்கப்பட்டது.

குற்றச்சாட்டுக்கள்

1. கும்பெனிக்குரிய கிஸ்தியை செலுத்தவில்லை.
2. கலெக்டர் லூஷிங்டன் விடுத்த உத்திரவுகளுக்கு சரியான பதில் தரவில்லை; தம்மை வந்து கண்டுபோகும்படி பலமுறை அவர் விரும்பி அழைத்தும் அந்த உத்திரவினை கட்டபொம்மன் உதாசீனப்படுத்தினார்.
3. கும்பெனியாரின் பொறுப்பிலுள்ள திருவைகுண்ட தானியக் கிடங்கை கொள்ளையடித்த தானாபதி பிள்ளையை பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் கட்டபொம்மன் ஒப்படைக்க மறுத்தார்.
4. சிவகிரி பாளையத்தைத்தாக்கி அந்தப் பாளையத்திலுள்ள மக்களையும், விவசாயிகளையும் கட்டபொம்மன் கொடுமைப்படுத்தினார்.
5. தனது இராணுவ நடவடிக்கைகளினால் தென் பிராந்திய பிரிட்டிஷ் ராணுவத்தைச் சேர்ந்த கும்பெனியின் படைஅதிகாரிகள் பலருடைய கொலைக்கு கட்டபொம்மன் காரணமாக இருந்தார்.

பதில்கள்

கட்டபொம்மன் மீது சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு, பதில் சொல்லும்படி கட்டபொம்மனிடம் கேட்கப்பட்டது. அப்போது இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு சுருக்கமாக பதில் தந்தார் கட்டபொம்மன். அவரது பதில்கள் துபாஷி இராமலிங்கமுதலியாரால் மொழிபெயர்க்கப்பட்டு பானர்மென்னுக்குச் சொல்லப்பட்டது.

கட்டபொம்மனின் முழக்கம்

1. நான் இது வரையில் யாருக்கும் கிஸ்தி செலுத்தியதில்லை. பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் எவருக்கும், அவர் எவ்வளவு பெரியவராகஇருந்தாலும், எப்பொழுதும் அவருக்கு கிஸ்தி செலுத்த வேண்டும் என்று நினைக்கவே இயலாது. ஆகவே நான் கிஸ்தி செலுத்த மறுத்தேன்.

2. என்னுடைய நண்பர்களானாலும், பகைவர்களானாலும் யாரும் என்னை அவமரியாதை குற்றஞ்சுமத்திட முடியாது. கும்பெனி சர்க்காரின் அதிகாரிகள் தங்களுடைய கடமைகளின் நிமித்தம் என்னை வந்து பார்த்து, என்னோடு உரையாடி இருக்கிற பொழுதெல்லாம், அவர்கள் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களை அழைத்துக் கேட்டால் இதனை அவர்களே உறுதிப்படுத்துவார்கள்.

நான் பணியாளன் அல்ல

திருநெல்வேலிக்கு வந்து கலெக்டர் அலுவலகத்திலே கலெக்டரைப் பார்ப்பதற்கு காத்திருக்க வேண்டும் என்ற உத்திரவினால் நான் மிகுந்த சினங் கொண்டேன். நான் கலெக்டரின் சொந்தப் பணியாளர் அல்ல.

காட்டிக் கொடுப்பது கூடிய காரியமல்ல

3. திருவைகுண்டத்தில் என்னுடைய மானேஜர் தானாபதி பிள்ளை செய்ததுதவறுதான் என்பதை ஒப்புக் கொள்கிறேன். கும்பெனியாரின் தானியக் கிடங்கை கொள்ளையடித்தது சரியான காரியமல்ல. ஆனால் அந்த வேளையில் மிகுந்த வறட்சி நிலவியது. மழையும் பொய்த்துப் போயிற்று. யாருக்கும் ஒருவிதமான தானியங்களும் கிடைக்கவில்லை. ஆதலால் தானியக் கிடங்கைப் பலவந்தமாகத் திறந்து மக்களை அங்கிருக்கும் தானியங்களை எடுத்துச் செல்ல அவர் அனுமதித்திருப்பார் என்று நம்புகிறேன். என்னுடைய அனுமதி இல்லாமல் இந்தக் காரியத்தை செய்ததற்காக அவர் என்னிடம் மன்னிப்புக் கேட்டார்; கம்பெனியாரால் தண்டிக்கப்பட்டு விடுவோம் என்று என்னுடைய பாதுகாப்பையும் நாடினார். நான் அவருக்குப் பாதுகாப்பு நல்கினேன்.

தன்னிடம் அடைக்கலம் புகுந்த ஒரு மனிதனை காட்டிக் கொடுப்பது கட்டபொம்மு நாயக்கரால் ஆகக்கூடிய காரியமல்ல. அதற்குப் பின்னும் கொள்ளையடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட எழுநூறு கோட்டை தானியங்களுக்குரிய 3300 ரூபாயுடன் அபராதம் எழுநூறும் சேர்த்து, நாலாயிரம் ரூபாயினைக் கொடுப்பதற்கு நான் முன் வந்தேன். ஆனால் கும்பெனியார்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

சகோதரப் பாளையங்கள்

4. தங்களுடைய விவசாயிகள் மற்றும் குடிமக்களால் ஏற்படும் கலவரங்களை ஒடுக்க எனது உதவியை என்னுடைய சகோதரப்

பாளையக்காரரான சிவகிரிப் பாளையக்காரர் உட்பட பலர் நாடியிருக்கிறார்கள். அவர்கள் அழைத்ததின் பேரில் அவர்களுக்கு உதவிட நான் சென்றிருக்கிறேன். கும்பெனி சர்க்கார் அவர்களுக்கு ஒருபோதும் உதவியதும் இல்லை. அவர்களைப் பற்றி கவலைப் பட்டதும் இல்லை.

5. எனதருமை பாஞ்சாலங்குறிச்சியை முதன் முதலாக தாக்க வந்தது கும்பெனியாரின் தளகர்த்தர்களாகிய நீங்களே. என் போன்ற பண்பும், சுயமரியாதையுமுள்ள ஒரு மனிதன் என்ன செய்வான் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? சரண் அடைந்து விடுவானா? அல்லது உங்களது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வானா?.... பின்னதாக எனது அருமைக் கோட்டை உங்களால் முற்றுகை இடப்பட்டு, உங்களது பீரங்கிகள் எனது கோட்டைச் சுவர்களுக்கு நேராக குறிபார்த்து வைக்கப்பட்டிருந்த நேரத்தில், இத்தகைய சூழ்நிலைகளை திருச்சிராப்பள்ளியில் இருக்கும் கும்பெனியாரின் உயர் அதிகாரிகளை நேரில் சென்று சந்தித்து விரிவாக விளக்க வேண்டுமென்பதற்காக எனது விசுவாசமுள்ள உதவியாளர்களுடன் ரகசியப்பாதை வழியாக தப்பிச் சென்றேன். ஆனால் நான் எனது மக்களை நிர்கதியாக கைவிட்டு விட்டு ஓடிவிட்டதாக கேவலமான வதந்தியைப் பரப்பினீர்கள். என்னை உயிருடன் பிடிப்பதற்காக என் தலைக்கு ஒரு விலையை நிர்ணயித்தீர்கள். நான் காட்டிக் கொடுக்கப்பட்டு பிடிபடுவதற்கு உதவிட புதுக்கோட்டை தொண்டைமான், எட்டயபுரம் பாளையக்காரர்கள் மற்றவர்களுக்கு அந்த ஆசை காட்டுதல் போதுமானதாக இருந்தது.

எதிரியே நீதிபதியா?

இதற்கிடையில் பாஞ்சாலங்குறிச்சியில் கிடைத்தது அத்தனையும் கொள்ளையிட்டீர்கள்; கொள்ளையிட்ட அந்தக் கும்பலுக்கு நீங்களே தலைமை தாங்கிச் சென்றீர்கள். அப்படிப்பட்ட நீங்களே இன்று என்மீது குற்றஞ் சுமத்துபவராகவும் ஆகி இருக்கிறீர்கள்.

(இரு தரப்பினர் போரிட்டபோது, ஒரு தரப்பிற்கு தலைமை தாங்கிய ஒருவரே (பானர்மென்) மற்றொரு தரப்பை (கட்டபொம்மனை) விசாரிக்கும் நீதிபதியாக இருந்த விந்தைச் செயல், யுத்த கால வரலாற்றில் நடைபெற்றிராத ஒரு சம்பவமாகும்)

என்னை வாதாடச் சொல்கிறீர்கள்? இதில் வாதாட என்ன

இருக்கிறது? இதுதான் என் தலைவிதி; நான் இதனை ஒத்துக் கொள்கிறேன். நீங்கள் இஷ்டப்படுவது போல் என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என்றார் கட்டபொம்மன்.

சதி ஆலோசனை

தலைமை தாங்கிய பானர்மென் வீரபர்ண்டிய கட்டபொம்மனைப் பார்த்து'மேலும் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?' என்று திரும்பவும் கேட்டபோது, மௌனம் சாதித்தார் கட்டபொம்ம்ன்.

விசாரணை நடத்திய அந்தக்குழு சிறிது களைப்போடு, அவர்களுடைய குறிப்புக்களைத் திருப்பிப் பார்த்துக் கொண்டது. அவர்களுக்குள் சிறிய ஆலோசனையும் செய்தது.

திட்டமிட்டபடி தூக்கு

அப்போது மதிய நேரமாயிற்று. மாலையின் நிழல்கள் சென்னைக்குச் செல்லும் அந்த நெடுஞ்சாலையின் மீது படியத் துவங்கியது. காவலுக்கு நின்ற வீரர்களின் குதிரைகள் திமிர ஆரம்பித்தன; சலசலத்தன. கரிய மேகங்கள் வானத்தில் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. கட்டபொம்மனின் பதிலுக்குப் பின்னர் தலை நரைத்து ஓய்ந்து போன உருவமாக மேஜர் பானர்மென் நிசப்த நிலையில் தோற்றமளித்தார்.

பின் ஏற்கனவே திட்டமிட்டபடி கட்டபொம்மனுக்கு தூக்கின் மூலம் மரண தண்டனை விதித்திட வேண்டுமென்ற தீர்ப்பினை எழுதி, அத்துடன் இந்தத் தண்டனை இன்றைய தினத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். உடனிருந்த மற்ற வெள்ளை அதிகாரிகள் அங்கிருந்து எழுந்து சென்றார்கள்.

உடனடியாக கும்பெனிப் படையினரும், கும்பெனியின் விசுவாச ஊழியர்களும் கட்டபொம்மனை பொறுப்பேற்றுக் கொண்டார்கள்; திட்டமிட்ட படி தூக்குத் தண்டனையை நிறைவேற்றிடத் தயாரானார்கள்.

கட்டைப் புளியமரத்தில்

ஏற்கனவே தூக்குமரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த கட்டைப் புளிய மரத்தடிக்கு கட்டபொம்மனை அழைத்துச் சென்றார்கள்.

ஒரு படை வீரன் மரத்தின் மீது ஏறினான். ஒரு கிளையிலிருந்து ஒரு கயிற்றைக் கட்டி அந்த முடிச்சை கீழே தொங்க விட்டான்.

மற்றொரு வீரன் ஒரு சிறிய ஏணிப்படியை அந்த தொங்கும் கயிற்றுக்கு அருகில் தள்ளி வைத்தான். தற்காலிகமாகச் செய்யப்பட்ட அந்த ஏணியின் ஐந்து படிகளில் கட்டபொம்மன் ஏறிச் சென்றார்.

நினைவுகளில் தன்னை மறந்தவராக, தொண்டையை கனைத்துக் கொண்டு தன்னைச் சுற்றிலுமிருந்த கூட்டத்தை கடைசியாகப் பார்வையிட்டார் கட்டபொம்மன். அதன்பின் அந்த தூக்கு முடிச்சைக் கையிலெடுத்து தனது கழுத்தை அதற்குள் தானே செலுத்திக் கொண்டார். வெள்ளைக்காரர்களுடன் சுதேசி வீரர்களும் கட்டபொம்மனைச் சுற்றி பேச்சற்று நிசப்தமாக நின்று கொண்டிருந்தனர்.

ஓ! முருகக் கடவுளே

கட்டபொம்மன் இறுதியாக மிகுந்த சப்தமிட்டு 'ஓ! முருகக் கடவுளே' என்று திருச்செந்தூரின் முருகனை நோக்கிக் கூறிவிட்டு, தன் கீழுள்ள படியைத் தானே உதைத்துத் தள்ளினார். கழுத்து நெறிக்கப்பட்டு, கயிறு கழுத்தைச் சுற்றி இறுகியது.

இரண்டு மணி நேரம் தொங்கிய உடல்

இரண்டு மணிநேரம் எல்லோரும் பார்க்கும் வண்ணம், கட்டபொம்மனது உடல் அந்த மரத்தில் தொங்கியது.

முந்தைய இரவில் கட்டபொம்மனுடன் சிறையிலிருந்த தம்பி ஊமத்துரையும், அவரது சொந்தப் பணியாளரும் கட்டபொம்மனின் இறுதிக் கிரியைகள் செய்வதற்காக அழைத்து வரப்பட்டார்கள்.

அருகிலிருந்த இடிந்து போன ஒரு கோயிலுக்குப் பக்கத்தில் காய்ந்து போன மரக்கிளையில், ஒரு பெரிய நெருப்பு உண்டாக்கப்பட்டது.

முப்பத்தொன்பது வயதில் மாப்புகழ்

39 வயது நிரம்பிய தங்களது தலைவனுக்காகக் காத்துக் கொண்டிருந்த அந்தக் கூட்டத்திலிருந்த ஆண்களும், பெண்களும் அழுது கொண்டிருந்தார்கள். சுற்றியிருந்த கூட்டத்தினர் தலைவணங்க நின்று கொண்டிருக்க கட்டபொம்மனது உயிரற்ற உடல் எரியூட்டப்பட்டது.

வீரமங்கை ஆர்க்ஜோன்

பதினைந்தாம் நூற்றாண்டில் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த பிரெஞ்சு தேச வீர மங்கை ஆர்க் ஜோனை மக்கள் அறிய பொது இடத்தில் உயிரோடு தீ வைத்துக் கொளுத்திய வெள்ளையர், கயத்தாற்றில்

கட்டபொம்மனது உடலுக்கும் வெள்ளையர்கள் கொள்ளி வைத்தனர். அன்று மூண்ட தீ, நூற்றி ஐம்பது ஆண்டுகள் கழித்து அவர்களை அழிக்கும் ஊழித்தீயாக சுதந்திரத் தீபமாக ஜொலிக்கப் போகிறது என்பதனை அப்போது இறைவனைத் தவிர எவர் தான் அறிந்திருக்க முடியும்?

வெள்ளைத் தளபதிகள் வழங்கிய பாராட்டுக்கள்

வீரத்தின் இலக்கணமாகத் திகழ்ந்த வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிட அழைத்து வந்தபோது, அவரது செயல் பற்றி, கட்டபொம்மனை போர்க்களத்திலே சந்தித்துப் போரிட்ட எதிரியும், அவருக்குத் தூக்குத் தண்டனை வழங்கியவருமான மேஜர் பானர்மென் மறுநாள் (17.10.1799) அரசாங்கத்திற்கு எழுதிய கடிதத்தின் வரிகள், வரலாற்றில் இன்றும் என்றும் கட்டபொம்மனின் வீரத்திற்கு கட்டியங் கூறிக் கொண்டிருக்கும். இதோ அந்தக் கடித வரிகள். . . .

"It may not be amiss here to observe, that the Manner and behaviour of the Polegar, during the whole time of his being before those who were assembled yesterday at the examination whick took place, was undaunted and supercilious.

He frequently eyed the Etteapore Polegar, who had been so active in attempting to secure his person, and the Polegar of shevegherry with an appearance of indignant scorn; and when he went out to be executed he walked with a firm and daring air, and cast looks of sullen contempt on the Polegars to his right and left as he passed. It was reported to me, that on his way to the place of execution he expressed some anxiety for his dumb brother alone; and said, when he reached the foot of the tree, on which he was hanged, that he then regretted having left his fort, in the defence of which it would have been better for him to have died."

Camp at Kytar John Banner man
17th oct 1799.

வணங்காமுடி

''கயத்தாற்றில் விசாரணை நடைபெற்ற முழுநேரத்திலும் கட்டபொம்மன் கொஞ்சங்கூட பயப்படாமலும், கெம்பீரமாகவும், வணங்கா முடியாகவும் நிமிர்ந்து நின்றான் என்பதனை இந்த இடத்தில் குறிப்பிட்டுக் காட்டுவது தவறாகாது.

தன்னைப் பிடிப்பதற்கு மிகுந்த நடவடிக்கை எடுத்த எட்டயபுரம் பாளையக்காரரையும், சிவகிரி பாளையக்காரரையும் அடிக்கடி குரூரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

துணிவான நடை

க்ட்டபொம்மனைத் தூக்கிலிட அழைத்துச் செல்லும் போது தன்னுடைய வலப்பக்கத்திலும், இடப்பக்கத்திலும் இருந்த பாளையக்காரர்களைத் துச்சமாகப் பார்த்துக் கொண்டு, துணிவான முறையில் திடமாக தீரமாக நடந்து சென்றான்.

கட்டபொம்மன் தூக்கிலிடப்படும் இடத்திற்குச் செல்லும் வழியில் தன்னுடைய தம்பி ஊமத்துரையைப் பற்றி மிகுந்த கலக்கத்தை தெரிவித்துக் கொண்டான் என்று என்னிடம் கூறப்பட்டது.

அந்த மரத்தின் அருகே சென்றபோது 'என்னுடைய கோட்டையைப் பாதுகாப்பதிலேயே நான் மடிந்திருந்தால் நலமாயிருந்திருக்குமே கோட்டையை விட்டுச் சென்றது தவறாகி விட்டது' என்று வருந்தியதாகவும் என்னிடம் தெரிவித்தார்கள்.''

கர்னல் வெல்ஷ்

கர்னல் வெல்ஷ் என்னும் ஆங்கிலத் தளபதி பாஞ்சாலங்குறிச்சியின் பிந்தையப் போரில் நேரடியாகப் பங்கு கொண்டவர். அவர் தான் எழுதிய 'போர்நினைவுக்குறிப்பில்' முதற் பாகத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றி எழுதியுள்ளதாவது:

"The Southern Poligars, a race of rude warriors, habituated to arms and independence, had been but lately subdued, and those of Panjalum coorchy, were the hardiest and bravest of the whole.

Their chief, called **Catabomia Naig**, having successfully defended the fort against a force under Colonel Bannerman two years before, had at length been taken prisoner, with the rest of his family, and kept in close confinement. It is not for me to decide upon the justice or policy of such a Measure, but I should have thought liberality and kindness would have been the best way to secure their allegiance. While their chiefs were condemned to a perpetual and ignominious imprisnment, the fort of Panjalum coorchy was ordered to be razed to the ground, with some others of less note. Such treatment to a high spirited people was not much calculated to win their affections, and the indignities to which individuals were subjected by the

native servants of the collector, adding fuel to the fire, the whole burst out at once, and for a season bore down all before them"

அஞ்சா நெஞ்சம்

''தென்னாட்டுப் பாளையக்காரர்கள் வலிமை வாய்ந்த போர்வீரர்களின் ஜாதி. ஆயுதமேந்திப் போராடுவதையும், சுதந்திர உணர்வையும் பாரம்பரியமாகக் கொண்டவர்கள். அவர்கள் கடைசியில் அடக்கப்பட்டுள்ளனர். பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் மற்ற எல்லாப் பாளையக்காரர்களிலும் உறுதியும், அஞ்சா நெஞ்சமும் வாய்ந்தவர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கர்னல் பானர்மென் கீழிருந்த படைகளுக்கு எதிராகக் கோட்டையை வெற்றிகரமாகக் காத்த கட்டபொம்மு நாயக்கர் என்று அழைக்கப்படும் அவர்களுடைய தலைவர் கடைசியில் அவருடைய குடும்பத்தில் மிஞ்சியவர்களுடன் கைதியாகப் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். அத்தகைய ஒரு நடவடிக்கையின் நீதி அல்லது கொள்கை பற்றி நான் ஏதும் கூற முடியாது. ஆனால் அவர்களுடைய விசுவாசத்தைப் பெறுவதற்குச் சிறந்த வழி தாராளப்போக்கும் அன்புமே என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

அவர்களுடைய தலைவர்களை நிரந்தரமாக, கேவலமான காவலில் வைத்துவிட்டுப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையையும், மற்றும் சில முக்கியமற்ற கோட்டைகளும் இடித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன. மிகவும் தன்மான உணர்ச்சி மிகுந்த மக்களிடம் இத்தகைய நடவடிக்கையைக் காட்டியிருப்பது அவர்களுடைய அன்பைச் சம்பாதிக்கும் முறையில் அமைந்திருக்கவில்லை.

இதற்கு மேல் கலெக்டரின் சுதேசிப் பணியாளர்கள் தனி நபர்களைக் கேவலமாக நடத்தியது எரிகிற நெருப்புக்கு எண்ணெய் வார்த்தது போலாயிற்று. தகுந்த நேரம் வந்ததும் குமுறிக் கொண்டிருந்த மனம் வெடித்தது''

என்று கர்னல் வெல்ஷ் 1830 ஆம் ஆண்டிலேயே எழுதி வைத்துள்ளார்.

மேஜர் பானர்மென்னின் கொடிய செயலை நேரடியாகக் குறிப்பிடாமல், தனது சக ஆங்கிலேய அதிகாரி என்பதால் இங்கு கர்னல் வெல்ஷ் நழுவிச் சென்றிருந்தாலும், வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆற்றலை, அஞ்சா நெஞ்சத்தைப் புகழ்ந்து அவர் எழுதியிருப்பது சரித்திரத்தில்

அன்றும் இன்றும் என்றும் கட்டபொம்மனின் புகழுக்கு சாட்சியமளித்துக் கொண்டிருக்கு மல்லவா?

புதுக்கோட்டை பெற்ற பரிசு

புதுக்கோட்டை அரசர் விஜயரகுநாத தொண்டைமானுக்கு கும்பினியர் வரி முழுவதையும் தள்ளினர். என்றும் திறை செலுத்தாமலும், தலைமையான நிலையில் சர்வசுதந்திரமாய் தமது ராச்சியத்தை அனுபவித்து வரவும் உத்திரவு வழங்கினர்.

எட்டப்பருக்கு கிட்டிய பரிசு

எட்டப்ப நாயக்கருக்கு சிவஞானபுரம் என்னும் ஒரு கிராமத்தினை கும்பினியார் இனாமாக 22.1.1800 இல் வழங்கினர். அவர் அளவிலா இன்பத்துடன் அதனைப் பெற்றுக் கொண்டார்.

பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் வடபகுதியிலுள்ள 79 கிராமங்கள் எட்டயபுரத்தார் கீழ் வந்தது. எஞ்சிய 25 கிராமங்கள் மணியாச்சி பாளையக்காரரின் கீழ் வந்தது.

இடிக்கப்பட்ட கோட்டைகள்

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதற்குப் பின்னால் திருநெல்வேலிச் சீமையில் 42 கோட்டைகளை இடித்துத் தகர்த்தனர் வெள்ளையர். பாளையக்காரர்கள் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு அவர்கள் அரசுக்கு வரிவசூலித்துத் தரும் ஜமீன்(ஏஜெண்டு)கள் என்ற நிலைக்குத் தாழ்த்தப் பட்டனர்.

கட்டபொம்மனைத் தூக்கிலிடப்பட்ட பத்து நாட்களில் தளபதி பானர்மென் இங்கிலாந்துக்குச் சென்று விட்டார்.

பாளையங்கோட்டை சிறைச்சாலை உடைப்பு

1801 பிப்ரவரி 2 இல் பாளையங்கோட்டை சிறைச்சாலையில் அடைபட்டிருந்த ஊமத் துரையும், அவரது தோழர்களும் சிறைக்கதவை தகர்த்து அங்கிருந்து வெளியேறினர். மீண்டும் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைக் கட்டிடவும், கும்பெனிப் படைகளை எதிர்த்துப் போரிடவும், கும்பெனியார் கைப்பற்றிய பாளையங்களை போரிட்டு திரும்பவும் கைப்பற்றுவது என்ற திட்டங்களுடன் அவர்கள் செயல்பட்டனர். அதன்படி மீண்டும் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை

எழுந்தது; பாஞ்சாலங்குறிச்சியில் திரும்பவும் வெள்ளையர் படை முகாமிட்டது. திரும்பவும் பெரும் போர் துவங்கிற்று. இறுதியில் ஊமத்துரை தப்பிச் சென்றார். மானங்காத்த மருது பாண்டியர்கள் சிவகங்கைச் சீமையில் அடைக்கலம் தந்தனர்.

ஊமத்துரைக்கு தூக்கு

ஆத்திரம் கொண்ட கும்பெனியார் அங்கும் போர் தொடுத்தனர். ஊமத்துரை பிடிபட்டார். 1801 ஜுன் 10 இல் பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்கு மேற்கிலுள்ள பீரங்கி மேட்டில் ஊமத்துரை தூக்கிலிடப்பட்டார். நான்கு ஆண்டுகள் நடைபெற்ற போர் 27.10.1801 இல் திருப்பத்தூரில் மருது பாண்டிய மன்னர்கள், வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்ட போது முடிவுக்கு வந்தது.

உப்பும் ஆமணக்கும் விதைக்கப்பட்டது

''பாஞ்சாலங்குறிச்சியில் இருக்கும் கல்லறைகளுக்கு வடக்கே சற்று தூரத்தில் பிரிட்டிஷ் பீரங்கிகளை அமைப்பதற்காக ஏற்படுத்திய மண்மேடு இருக்கிறது. அதிலிருந்து நேராக அரை மைல் கிழக்குப் பக்கமாக கோட்டை அமைந்திருந்தது, கோட்டையைக் கைப்பற்றிய போது, தூசியும் புழுதியுமாக இருந்தது; அதனை கேப்டன் புரூஸ் என்பவர் இடித்துத் தரைமட்டமாக்கினார். ஆனால் பாளையக்காரரின் அரண்மனைக்கும் மற்ற முக்கிய கட்டிடங்களுக்கும் உண்டான அஸ்திவாரங்கள் நல்ல புதுமையாகவே இருந்தன. செங்கல், சுண்ணாம்பு மற்றும் நல்ல கட்டிட வேலைப்பாடுடன் இருந்தது. பாஞ்சாலங் குறிச்சி கோட்டையில் எஞ்சியிருப்பது இந்த அஸ்திவாரங்களே. கும்பினி அரசாங்கத்தின் உத்திரவுப்படி கோட்டை இருந்த இடத்தை உழுது, ஆமணக்கு விதையையும் விதைத்து, உப்பையும் இட்டு பிற்காலத்தில் யாரும் இந்தப் பகுதியில் வாழவிடாதபடியும் செய்யப்பட்டிருக்கிறது'' என்ற அக்காலத்திய ஆவணக் குறிப்புகள் வெள்ளையரின் கொடூர உள்ளத்தை நமக்கு அறிவிக்கிறது.

"By orders of Government, the site of the fort, after its capture, was ploughed up and sowed with castor oil and salt, to indicate that it should never again be inhabited"

வீரத்தலைவர் வ.உ.சி.

சரியாக நூறு ஆண்டுகள் கழிந்தன. தூத்துக்குடியில் வீரத்தலைவர் வ.உ.சி வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் பொங்கி எழுந்தார். மக்களைத் திரட்டினார்; வெள்ளையர் எதிர்ப்பு ஊர்வலங்கள் நடைபெற்றது.

வீரபாண்டிய கட்டபொம்மனின் பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகில் அமைந்துள்ள ஓட்டப்பிடாரத்தில் பிறந்த வ.உ.சி; தானாபதி பிள்ளையின் இல்லத்திற்கு அருகில் வாழ்ந்த வ.உ.சி இந்த வீர வரலாற்றினை நெஞ்சத்திலே தாங்கி, ஆங்கிலேயருக்கு எதிராக 1906 இல் சுதேசிக் கப்பலை தூத்துக்குடிக்கும் -இலங்கைக்கும் ஓட்டினார். கப்பலோட்டிய தமிழன் என்றும் போற்றப்பட்டார்.

மகாகவி பாரதியார்

பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகிலுள்ள எட்டயபுரத்தில் தோன்றிய தேசியக்கவி பாரதி வெள்ளையரை எதிர்த்து வீராவேசக் கவிதைகளை எழுதி மக்களிடம் சுதந்திர தாகத்தை வளர்த்தார்.

வீரவாஞ்சி

1799 அக்டோபர் 16 இல் மாவட்டக் கலெக்டர் நிலையில் இருந்த பானர்மென் வீரத்தலைவர் வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிட்டு உடலை நெருப்பாலே பொசுக்கினர். அன்று மக்கள் உள்ளத்தில் மூண்ட தீ அணையவே இல்லை.

கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட கயத்தாற்றிற்கு அருகே மணியாச்சி ரயில் நிலையத்தில் 17.6.1911 இல் அப்போதைய நெல்லை மாவட்ட ஆக்டிங் கலெக்டர் ராபர்ட் வில்லியம் டி. எஸ்காட் ஆஷ் துரையை செங்கோட்டையைச் சேர்ந்த வீர இளைஞர் வாஞ்சி அய்யர் கைத் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளி தனது வஞ்சத்தை நாட்டின் விடுதலைக்காகத் தீர்த்துக் கொண்டார்.

112 ஆண்டுகளுக்குப்பின் பழிக்குப்பழியாக கலெக்டர் கொல்லப்பட்டு, கணக்குத் தீர்க்கப்பட காரணமாக இருந்தவர் செங்கோட்டை R. வாஞ்சி அய்யர்.

(சரியாக 200 ஆண்டுகளுக்குப் பின்னால் இந்தச் சம்பவங்களைத் தமிழக மக்களுக்கு மறுபடியும் நினைவு கூர்ந்திட, இச்சிறு வெளியீட்டை எழுதிட செங்கோட்டையைச் சேர்ந்த எனக்கு வாய்ப்பளித்த இறைவனுக்கும் காலத்திற்கும் நன்றி கூறுகிறேன்.)

காலந் தோறும் வீரபாண்டிய கட்டபொம்மனின் புகழினைப் பரப்பியவர்கள், பரப்பிக் கொண்டிருப்பவர்கள், ஏராளம்; ஏராளம்.

கட்டபொம்மன் புகழ் வளர்க்கும் க. சுப்பு

கந்தசாமி நாயக்கர் - பொக்கம்மாளின் புதல்வராக எஸ்.பி.நத்தத்தில் பிறந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க. சுப்பு 'நக்கீரன்' இதழில்

‘கட்டபொம்மன் யார்?’ என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதி கட்டபொம்மனின் புகழ் பரப்பியதோடு நில்லாமல் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை திரும்பவும் எழுந்திட வற்புறுத்தி வெற்றி கண்டவர்.

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கோர் நினைவுக் கோட்டை, அவர் வழி வந்தவர்களுக்கு எல்லாம் வாழ்வதற்கு வீடு, கட்டபொம்மன் பெயரால் போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் பெயரால் மாவட்டம், ஆண்டு தோறும் கட்டபொம்மனுக்கு அரசு விழா இப்படி கட்டபொம்மன் புகழ் நிலைத்து நிற்க உழைத்தவர், உழைத்து வருபவர் க. சுப்பு.

வீரபாண்டிய கட்டபொம்மன்

கவிஞர் மு. பரதபாண்டியன், மு. சங்கரவேலு ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவரும் ‘வீரபாண்டிய கட்டபொம்மன்’ எனும் தனிச்சுற்று இதழ் கட்டபொம்மனின் புகழினைப் பரப்பிக் கொண்டு இருக்கிறது.

தமிழ்நாடு இராஜகம்பளமகாஜன சங்கம்

மேலமுடி மன்னார்கோட்டை வை. ஜெயராஜ், அருகம்பாளையம் பி.எஸ்.மணி, ஸ்ரீவில்லிப்புத்தூர் என். நல்லையா, விருதுநகர் ஏ. சங்கையா ஆகியோர் பொறுப்பு வகிக்கும் ‘தமிழ்நாடு இராஜகம்பள மகாஜன சங்கம்’ கட்டபொம்மன் புகழ் பாடி வருகிறது. கட்டபொம்மனின் 200வது நினைவு நாளையொட்டி சிறப்பு மலரும் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆசிரியர் என். நல்லையா உருவாக்கிய கட்டபொம்மன் நாடகம் அப்பகுதி பள்ளிக்கூடங்களில் இன்றும் நடத்தப்பட்டு வருகிறது. இந்திய சுதந்திரப் பொன்விழா ஆண்டில் இந்திய அரசு வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆங்கில வரலாற்று நூலை வெளியிட்டுள்ளது.

கட்டபொம்மன் சிலை

முத்தமிழ் வளர்த்த மதுரையிலும், பாளையங்கோட்டையிலும், தமிழகத்தின் பல்வேறு குக்கிராமங்களிலும் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு சிலை அமைத்து அப்பகுதிகளைச் சார்ந்த மக்கள் தங்கள் நன்றியினை இன்றும் செலுத்தி வருகிறார்கள்.பல கிராமங்களில் இன்றும் புதிதாக சிலைகள் அமைக்கப்படுகின்றது.

தமிழர் தலைவர் வைகோ

'துரத்தி வந்த வேட்டை நாயை எதிர்த்து நின்றது முயல்; முயல் கால் பதித்து நின்ற இடம் பாஞ்சாலங்குறிச்சிச் சீமை' என்று வீரத்தின் விளைநிலமான பாஞ்சாலங்குறிச்சி குறித்தும், மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மனின் அஞ்சாநெஞ்சம் குறித்தும் பாராளுமன்றத்திலும், தமிழகத்தில் பொதுக்கூட்டங்களிலும், முக்கிய நிகழ்ச்சிகளில் உரையாற்றுகின்ற போதும் வீரபாண்டிய கட்டபொம்மனின் புகழ்பாடி வருபவர் மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளர் வைகோ.

கட்டபொம்மனின் வாரிசு

நெருக்கடி நிலை காலத்தில் அவசர நிலைப் பிரகடனத்தை எதிர்த்து, ஜனநாயகத்தினைக் காத்திட நாடெங்கும் பல்லாயிரக்கணக்கில் அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அப்போது பாளையங்கோட்டை சிறையேகினார் தென்பாண்டி சிங்கம் வைகோ. அங்கு வேறு வழக்கில் தூக்குத்தண்டனை அடைந்து சிறையில் வாடிக்கொண்டிருந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசு குருசாமி நாயக்கரின் தூக்குத் தண்டனையை கருணை அடிப்படையில் ரத்து செய்திட, இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் சுப்ரீம் கோர்ட் வரை சென்று வாதாடி, போராடி கட்டபொம்மனின் வாரிசான குருசாமி நாயக்கரின் தூக்குத்தண்டனையை ரத்து செய்திட பெரும் முயற்சி எடுத்து வெற்றி கண்டவர் சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ.

நினைவு தபால் தலை

வீரபாண்டிய கட்டபொம்மனின் 200வது நினைவு நாளையொட்டி (16.10.1999) அவரது நினைவாக இந்திய அரசின் சார்பில் நினைவு தபால் தலை வெளியிட மத்திய அமைச்சர்களுக்கு கடிதங்கள் வரைந்தும், இந்தியப் பிரதமர் திருமிகு. வாஜ்பாய் அவர்களிடம் எடுத்துரைத்து அந்தக் கோரிக்கையில் வெற்றி கண்டவர் புரட்சித் தளபதி வைகோ.

வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரத்தினை, சிறப்பினை, புகழினை, ஆற்றலை, அஞ்சாநெஞ்சத்தினை தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளில், பொதுக்கூட்டங்களில், மக்கள் மன்றங்களில் பறைசாற்றி புகழ்பரப்பி வருபவர் கலிங்கத்துச் சிங்கம் வைகோ.

இவ்வாறு நாடெங்கும் கட்டபொம்மனின் புகழ் பரவி காலத்தைக் கடந்து வரலாற்றில் நிலைத்து நிற்கிறது; நிலைத்து நிற்கும்; நிலைத்து நிற்கப்பாடுபடுவோம்; புகழ் பாடுவோம்; புகழ் பரப்புவோம் வாரீர்! வாரீர்!!

●●●●

வரலாற்று ஆய்வாளர்

செ. திவான் M.A., M.Phil., எழுதிய நூல்கள்

1.விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்
(சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10000 பெற்ற நூல்)
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்
(உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
3. ஆரியமாயை அகல....
(சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
4. திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
(தமிழகஅரசு - மத்திய அரசு நூலகங்களுக்கு வழங்கப்பட்ட நூல்)
5. நபிபெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்
6. தக்கலை பீர்முகம்மது (ரஹ்) ஞானப்பாடல்களும் சரிதையும்
7. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8. வ.உ.சி யின் அழகும் ஆரோக்கியமும்
9. வ.உ.சி யின் துன்பத்தின் கற்பனை
10. வ.உ.சி யின் அரசியல் பெருஞ்சொல்
11. வ.உ.சி யும் பெரியாரும் 12. தெற்கில் ஒலித்த தீன்குரல்
13. விடுதலைப்போரில் விஸ்வகர்மாக்கள்
14. பாரதியும் காங்கிரசும் 15. ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்!
16. கூடங்குளம் அணுஉலையை மூடு! 17. உண்மையின் சவுக்கடி
18.குடை 19. சிந்தனைக்கு 20. குடைப்புரட்சி
21. மக்கள் திலகமும் மக்கள் தலைவரும்
22. கலைஞரை வென்ற வைகோ 23. வாகை சூடி வரும் வைகோ
24. வைகோவின் பொன்மொழிகள்
25. வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்
(ஆய்வுநூல்) (ஆசிரியரின் 25 வது நூல்) (விற்பனையில்)
524 பக்கங்கள்விலை ரூ.120
26. சேதுசமுத்திர திட்ட வரலாற்று நாயகன் வைகோ
27. வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்
28. வ.உ.சி.யும் பரலி சு. நெல்லையப்பரும்
29. வேதங்கள் வெறுத்திடும் விக்கிரக வழிபாடு
30. கட்டபொம்மனின் கடைசி நாட்கள்...
31. இந்திய சுதந்திரப் போரில் இஸ்லாமியப் பக்கீர்கள் (1806) (அச்சில்)
32. வீரத் தலைவர் வ.உ.சி. (அச்சில்)
33. செய்குத் தம்பிப் பாவலரின் சம்சுதாசீன் கோவை (அச்சில்)
34. கம்பம் பீர்முஹம்மது பாவலர் (அச்சில்)
35. சமயப்பொறையாளர் சந்தா சாகிப் (அச்சில்)